## பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

வயலூர் ஓர் அழகான சிற்றூர். அது மலையின் மீது அமைந்திருந்தது. இனிய காலை வேளை! அப்போதுதான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. அதனால், சாலையில் அங்கும் இங்குமாய்த் தண்ணீர் தேங்கி இருந்தது. மரங்களின் கிளைகளிலும் இலைகளிலும் நீர்த்திவலைகள் தெரிந்தன. பஞ்சுப்பொதிகள் போன்ற மேகக் கூட்டங்கள், வளைந்து நெளிந்து மிதந்தபடிச் சென்றன. பச்சைப்பசேல் என்று வயல்வெளிகளில் சிலுசிலுவென்று காற்று வீசியது. மரங்களும் செடிகளும் சூழ்ந்த அந்த இடத்தில் பசுங்கன்றுகள் ஓடியாடிக் கொண்டிருந்தன.

1) பத்தியில் இடம்பெற்றுள்ள சிற்றூரின் பெயர் ____________________

அ. மணலூர் ஆ. மலையூர் இ. மத்தூர் ஈ. வயலூர்

2) சாலையில் தண்ணீர் தேங்கி இருக்கக் காரணம் ____________________

அ. குடிநீர்க்குழாய் உடைந்ததால் ஆ. குடத்தில் இருந்து நீர் கொட்டியதால்

இ. மழை பெய்ததால் ஈ. பனி படர்ந்ததால்

3) மேகக் கூட்டங்கள் எவை போன்று இருந்தன? ____________________

அ. பஞ்சுப் பொதிகள் ஆ. வெண்ணெய் உருண்டைகள்

இ. முயல் குட்டிகள் ஈ. பனி மலைகள்

4) பச்சைப் பசேல் என்று இருந்தவை எவை?

அ. காய்கள் ஆ. நீர்த் திவலைகள்

இ. மேகக் கூட்டங்கள் ஈ. வயல்வெளிகள்

5) காற்று எவ்வாறு வீசியது?

அ. சிலுசிலுவென்று ஆ. படபடவென்று

இ. மளமளவென்று ஈ. சடசடவென்று

6) மேற்கண்ட பத்திக்குப் பொருத்தமாகத் தலைப்பிடுக.

____________________

LIVEWORKSHEETS